**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No. 29/2021 தேதி-21.08.2025
(P.W.1) - ராஜேந்திரன்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. வழக்கு பட்டிகை சொத்துள்ள இடம் கருங்கல் தேர்வுநிலை பேரூராட்சிக்கு உட்பட்டது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து உள்ள இடம் அதிகமாக வியாபரம் நடக்ககூடிய இடம் இல்லை என்றால் சரியல்ல. கருங்கல் பேருந்து நிலையம் மற்றும் சந்தை சுமார் 700 மீட்டர் இருக்கும் என்றால் சரியல்ல 70 மீட்டர் தான் இருக்கும். வழக்கிற்காக நான் மாத வாடகை மற்றும் முன்பணத்தை மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் வழக்கு சொத்து 3 முக்கு சந்திப்பில் இருந்து திங்கள் சந்தை ரோட்டில் சுமார் 100 மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரியல்ல 15 மீட்டர் தொலைவில் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணம் பேராயர் பங்கு பேரவை தலைவர் மற்றும் மற்ற அலுவலக பொருப்பாளர்கள் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தற்போது வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள விவரங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

2. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2-வது நிபந்தனையாக "மாதவாடகை நிச்சயித்த ரூபாய் 1500/- -ம் முந்தைய முறைப்படி வருடந்தோறும் 10 சதவீதம் பத்து சதமானம் கூட்டி கொடுக்கவேண்டும்" என்றால் அதுபற்றி தெரியாது. பங்கு பேரவையில் நிருவாகிகள் அனைவரும் தேர்தல் மூலம் தான் தேர்ந்தெடுக்கபடுவார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கின் பிரதிவாதி 7 ஆண்டுகளாக பங்கு பேரவையில் துணை தலைவராக செயல்பட்டார் என்றால் சரிதான். தேர்தல் விரோதத்தின் காரணமாகவும் பிரதிவாதியை பழிவாங்க வேண்டும் என்று வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்சொன்ன 2-வது நிபந்தனை மீறி பிரதிவாதியை வழக்கு பட்டிகை சொத்தில் இருந்து சட்விரோதமாக காலிசெய்ய முயற்சித்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் சட்டவிரோதமாக காலி செய்யக்கூடாது என்று பிரதிவாதி அசல் வழக்கு எண். 205/2020 என்ற வழக்கை தாக்கல் செய்து தற்போதும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கில் பிரதிவாதி இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி IA.No.1/2020 என்ற மனுவை தாக்கல் செய்தார் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன மனுவில் இடைக்கால உறுத்துக்கட்டளை இவ்வழக்கின் பிரதிவாதிக்கு ஆதரவாக வழங்கப்பட்டது என்றாலும் கொரானா கட்டுப்பாடுகள் காரணமாக அதை நீட்டிக்க முடியவில்லை

என்றால் அதுபற்றி தெரியாது. 07.09.2020 அன்று அவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மேற்சொன்ன IA.No.1/2020 அசல் வழக்குடன் முடிவு செய்யப்படவேண்டும் என்று அந்த மனு முடிக்கப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது.

3. மேற்சொன்ன வழக்கில் இப்போது உள்ள பங்கு பேரவை நிர்வாகிகளையும் கட்சி சேர்க்க வேண்டும் என்று ஒரு மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன மனுவிற்கான பதில் உரை தாக்கல் செய்ய நான் தான் என் வழக்கறிஞரிடம் சொல்லிக்கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கு பட்டிகையில் உள்ள கடையில் சுமார் 10 லட்சம் மதிப்பு மேல் Stationary பொருட்கள் உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. 17.08.2025 அன்று எங்கள் பங்கு பேரவையில் கடையின் மேற்கூரையை அகற்றவேண்டும் என்று தீர்மானம் போடப்பட்டது என்றால் இல்லை. மேற்சொன்ன கடையை சேதப்படுத்தி பிரதிவாதிக்கு நஷ்டம் ஏற்படுத்தினால் நானும் எங்கள் பங்கு பேரவை தான் பிரதிவாதிக்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 15.01.2020-ல் தேதியிட்ட பிரதிவாதிக்கு அனுப்பிய கடிதம் என்றால் சரிதான். மேற்சொன்ன கடிதம் பி.வா.சா.ஆ.1 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது. மேற்சொன்ன பி.வா.சாஆ-1 ஆவணத்தில் மாத வாடகை ரூ.5000/- என முடிவு செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. மேற்சொன்ன மாத வாடகை ரூ.5000/- என்று முடிவு செய்தது வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைக்கு எதிரானது என்றால் சரியல்ல. பொதுவாக 10 மாத வாடகையை தான் முன்பணமாக வாங்குவார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன கடிதத்தில் எந்தவித முகாந்திரமும் இல்லாமல் முன்பணம் ரூ.3 லட்சம் என்று கோரியுள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் மாத வாடகை ரூ.5000/- மற்றும் முன்பணம் 3 லட்சம் ரூபாயை குறைத்து எழுத்து முலமாக பிரதிவாதி கேட்டார் என்றால் சரியல்ல. 10.02.2020 அன்று பிரதிவாதிக்கு ஒரு கடிதம் அனுப்பினோம் என்றால் சரிதான். மேற்சொன்ன 10.02.2020 தேதியிட்ட கடிதத்தில் மீண்டும் மீண்டும் குறைத்து கேட்டார் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் எழுத்து பூர்வாமாக கேட்கவில்லை வாய் மொழியாகதான் கேட்டார். மேற்சொன்னவாறு வாய்மொழியாக கோரவில்லை என்றாலும் எழுத்து முலமாகதான் வாடகை தொகை முன்பணத்தை குறைத்து கேட்டார் என்றாலும் அதன் மீது நடவடிக்கை எடுக்காததால் பேராயர் மற்றும் உயர் அதிகாரியிடம் புகார் அளித்தார் என்றால் சரியல்ல. மேற்சொன்ன கடை சம்மந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளபோதும் நாங்கள் அனுப்பிய வழக்கறிஞர்

அறிவிப்பு வா.சா.ஆ.2 ஆவணம் என்றால் சரிதான். மேற்சொன்ன அறிவிப்பில் 03.09.2019 முதல் மாத வாடகை ரூ.9000/- தர வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல ரூ.7000/- தான் கேட்கப்பட்டது. இவ்வழக்கின் பிரதிவாதி மேற்சொன்ன அறிவிப்புக்கு பதில் அறிவிப்புக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).